# இடைக்கால COVID-19 சுய-பரிசோதனை வழிகாட்டல்

## டிசம்பர் 5, 2022 மாற்றங்களின் சுருக்கம்

- 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடம் சுய பரிசோதனைகளைப் பயன்படுத்துவது பற்றி சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள்
- உங்கள் பரிசோதனை நெகட்டிவாக வந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும். என்பது பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்கள்

## அறிமுகம்

COVID-19 இன் பரவலைக் குறைக்க உதவுவதற்கு பரிசோதனை மிகவும் முக்கியமானது. பரிசோதனையானது பல சூழ்நிலைகளில் பயனுள்ளதாக இருக்கின்றது:

- உங்களுக்கு COVID-19 தொற்றுக்கான அறிகுறிகள் இருந்தால், கூடிய விரைவில் பரிசோதனை செய்துகொள்ளவும், COVID-19 அறிகுறி முடிவுக்காண் மரங்கள் (மேலும் சில மொழிகளிலும் உள்ளன) இல் உள்ள படிகளைப் பின்பற்றவும்.
- நீங்கள் COVID-19 நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் வெளிப்பட்டு இருந்தால், பரிசோதனை உட்பட, COVID-19 உள்ள ஒருவரிடம் நீங்கள் வெளிப்பட்டு இருந்தால் என்ன செய்ய வேண்டும் (மேலும் சில மொழிகளில் உள்ளன) என்பதில் உள்ள வழிகாட்டுதலை நீங்கள் பின்பற்ற வேண்டும்.
- உங்களுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டாலும், COVID-19 நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் வெளிப்பட்டுள்ளதைப் பற்றி நீங்கள் அறியாவிட்டாலும் கூட, சில சமயங்களில் பயணம் போன்ற வரவிருக்கும் செயல்பாடுகளில் முன்கூட்டியே பரிசோதனை செய்து கொள்ளலாம்.

ஒரு மருத்துவ சேவை வழங்குநர் மற்றும் பொது சுகாதார பரிசோதனை தளம் மூலம் நீங்கள் பரிசோதனை செய்து கொள்ளலாம் அல்லது வீட்டில் அல்லது வேறு எங்கும் செய்யக்கூடிய சுய சேகரிப்பு பரிசோதனைக் கருவி அல்லது சுய பரிசோதனையைப் பயன்படுத்தலாம். சில நேரங்களில் சுய-பரிசோதனை "வீட்டு பரிசோதனை," "வீட்டிலேயே செய்யப்படும் பரிசோதனை" அல்லது "ஓவர்-தி-கவுண்டர் பரிசோதனை" என்றும் அழைக்கப்படுகிறது. தற்போதைய நோய்த்தொற்று, அதாவது தற்போது உங்களுக்கு COVID-19 இருக்கிறதா இல்லையா என்பதைச் சரிபார்க்க தற்போது கிடைக்கும் சுய சேகரிப்பு பரிசோதனைக் கருவிகள் மற்றும் சுய பரிசோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த காலத்தில் உங்களுக்கு COVID-19 இருந்ததா என்பது குறித்த தகவலை அவை வழங்காது.

சுய சேகரிப்பு பரிசோதனைக் கருவிகள் மற்றும் சுய பரிசோதனைக் கருவிகள், மருந்துக் கடை அல்லது சில்லறை விற்பனைக் கடையில் மருந்துச் சீட்டு மூலமாகவோ (மருந்துச் சீட்டு இல்லாமல்) கிடைக்கும். பெரும்பாலான தனியார் காப்பீடுகள் ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு 8 சுய-பரிசோதனைகளை உள்ளடக்கிய காப்பீடை வழங்க வேண்டும் (ஆங்கிலத்தில் மட்டும்). Department of Health (DOH, சுகாதாரத் துறை)இன் மூலம் வழங்கப்படும் Say Yes! COVID Test (COVID பரிசோதனைக்கு ஆம் என்று சொல்லுங்கள்!) முன்னெடுப்பின் மூலம் இலவச COVID-19 பரிசோதனையைப் பெற மாகாணம் முழுவதும் உள்ள அனைத்துக் குடும்பங்களும் தகுதியானவர்கள். இது எந்தவொரு கூட்டாட்சி முன்னெடுப்பிலும் கூடுதலாக செய்யப்படும் ஒரு விஷயமாகும். குடும்பங்கள் தற்போது ஒவ்வொரு மாதமும் இரண்டு ஆர்டர்களை செய்யலாம், இவற்றில் மாதத்திற்கு 10 இலவச பரிசோதனைகள் உள்ளது. ஆர்டர்களை Home ((முகப்பு) - Say Yes!

To Covid Test (sayyescovidhometest.org) (மேலும் சில மொழிகளில் உள்ளன)_மூலம் ஆன்லைனில் அல்லது DOH COVID-19 ஹாட்லைன் 1-800-525-0127 வழியாக சமர்ப்பிக்கலாம். தயாராக இருப்பதும், தேவைப்படும் போது பரிசோதனை செய்யக் கருவிகளை கையில் வைத்திருப்பதும் முக்கியம். பொதுவாக ஆர்டர் செய்த 2-4 நாட்களில் பரிசோதனைக் கருவிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம், இருப்பினும் இது மாகாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் மாறுபடக் கூடும்.

இச்சமயத்தில் COVID-19 துரித ஆன்டிஜென் பரிசோதனையை, 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதற்கு US Food and Drug Administration (FDA, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம்), அங்கீகரிக்கவில்லை. இருப்பினும், வீட்டிலேயே செய்யும் துரித ஆன்டிஜென் பரிசோதனைகள் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பிந்தைய வெளிப்பாடு, விலகியிருத்தல் மற்றும் அறிகுறி பரிசோதனை ஆகியவற்றிற்காகப் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படலாம். 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பரிசோதிக்க முடிவு செய்யும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் வீட்டிலேயே துரித ஆன்டிஜென் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

2வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான COVID-19 துரித ஆன்டிஜென் பரிசோதனையை FDAஅங்கீகரிக்கவில்லை என்பதால், K-12 பள்ளிகள் மற்றும் Medical Test Site (MTS, விலக்களிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை தள) உரிமம் கொண்ட குழந்தை பராமரிப்பு நிலையங்களுக்கு 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வீட்டிலேயே செய்யும் துரித ஆன்டிஜென் பரிசோதனைகளைச் செய்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. K-12 பள்ளிகள் மற்றும் குழந்தை பராமரிப்பு நிலையங்கள், பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களின் பயன்பாட்டிற்காக வீட்டிலேயே செய்யக்கூடிய துரித ஆன்டிஜென் பரிசோதனைக் கருவிகளை வழங்கலாம்.

சுய பரிசோதனைக்குப் பிறகு என்ன செய்ய வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலை இந்த ஆவணம் வழங்குகிறது. இதன் பொருள், இது ஒரு மருத்துவ சேவை வழங்குநரால் பரிந்துரைக்கப்படாமல் அல்லது நிர்வகிக்கப்படாமல் அல்லது ஆய்வகத்திற்கு அனுப்பப்படாமல் இது நீங்களே சுயமாகச் செய்துகொள்ளும் ஒரு பரிசோதனை ஆகும்.

நீங்கள் சுய பரிசோதனையைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், பரிசோதனையைப் பயன்படுத்துவதற்கு முன்பு உற்பத்தியாளரின் முழுமையான அறிவுறுத்தல்களைப் படிக்கவும். உங்கள் பரிசோதனை
முடிவுகளைப் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், மருத்துவ சேவை வழங்குநரிடம் கலந்துரையாடுங்கள். சில பள்ளிகள் மற்றும் பணியிடங்கள் மீண்டும் வேலைக்கு அல்லது பள்ளிக்கு திரும்புவதற்கு சுய பரிசோதனைகளை முடிவுகளை ஏற்றுக்கொள்ளலாம். நீங்கள் மீண்டும் வரத் தயார் என்பதைத் தீர்மானிக்க, உங்கள் முதலாளியிடமும், பள்ளியிலும் உங்கள் பரிசோதனை முடிவுகளைப் பற்றி கலந்துரையாட வேண்டும்.

Say Yes! COVID Test Digital Assistant(டிஜிட்டல் உதவியாளர்) (ஸ்பானிஸ் மொழியில் உள்ளது)ஐப் பயன்படுத்தி உங்கள் சுய பரிசோதனை முடிவுகளை (நெகட்டிவ் மற்றும் பாசிட்டிவ் இரண்டும்) ஆன்லைனில் தெரிவிக்கவும். Say Yes! COVID Test! திட்டத்தில் இருந்து உங்கள் பரிசோதனைக் கருவியை நீங்கள் ஆர்டர் செய்யாவிட்டாலும், இந்தக் கருவியைப் பயன்படுத்தி, எந்தவொரு சுய-பரிசோதனை முடிவையும் தெரிவிக்கலாம். சுய-பரிசோதனை முடிவுகளைப் பற்றி தெரிவிப்பது, வாஷிங்டனில் COVID-19 பரவுவதை நாங்கள் நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது.

## உங்கள் பரிசோதனை பாசிட்டிவாக இருந்தால்,

சுய பரிசோதனையின் மூலம் உங்களுக்கு பாசிட்டிவ் என்று வந்தால், உங்களையும் மற்றவர்களையும் எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றிய விரிவான தகவலுக்கான வழிகாட்டுதல்,

விலகியிருத்தல் பற்றிய தகவல்கள் மற்றும் கடுமையான நோய்க்கான அதிக ஆபத்தில் நீங்கள் இருந்தால் சிகிச்சையை எவ்வாறு அணுகுவது ஆகியவைப் பற்றி தெரிந்து கொள்ள வாஷிங்டன் மாகாண DOHஇன் உங்களுக்கு COVID-19 பரிசோதனையில் பாசிட்டிவ் என்று வந்தால் என்ன செய்வது (மேலும் சில மொழிகளில் உள்ளன) என்ற இணைப்பைப் பார்க்கவும். பரிசோதனையின் முடிவு பாசிட்டிவாக வந்தால் மீண்டும் பரிசோதனை பரிந்துரைக்கப்படாது. உங்கள் பாசிட்டிவ் பரிசோதனை முடிவைப் பற்றி உங்கள் மருத்துவ சேவை வழங்குநரிடம் கூறுங்கள் மேலும் நீங்கள் நோய்வாய்ப்படும் போது அவர்களுடன் தொடர்பில் இருங்கள். உங்களிடம் கேள்விகள் இருந்து, உங்களால் மருத்துவ சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ள முடியாவிட்டால், WA DOH ஹாட்லைனை 1-800-525-0127 என்ற எண்ணில் அழைக்கவும்.

ஆரம்பநிலையிலே COVID-19 மருத்துவ சிகிச்சைகளை (சிகிச்சைகள் மற்றும் மருந்துகள்) எடுத்துக்கொண்டால், மிகவும் தீவிரமான COVID-19 நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படும் அபாயத்தில் உள்ளவர்கள் கடுமையான நோய்த்தொற்றுக்கு உள்ளாவதையும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கான அபாயத்தையும் குறைக்கலாம். மிகவும் நோய்வாய்ப்படும் நபர்களில் முதியவர்கள் (50 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள், வயதாகும் போது ஆபத்தும் அதிகரிக்கும்), தடுப்பூசி செலுத்தாதவர்கள் அல்லது புதுப்பித்த நிலையில் இல்லாதவர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு மண்டலம் போன்ற சில மருத்துவ நிலைமைகள் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் ஆகியோர் அடங்குவர். நீங்கள் தகுதியுடையவர் என்று நினைத்தால், COVID-19 மருத்துவ சிகிச்சைகளை (Pre-exposure prophylaxis (PrEP,முன்-வெளிப்பாடு நோய்த்தடுப்பு),மோனோக்ளோனல் ஆன்டிபாடிகள் அல்லது வாய்வழி வைரஸ் தடுப்பு மருந்துகள்) பெறுவதற்கான உங்கள் தகுதியைத் தீர்மானிக்க மருத்துவ சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும். தாமதப்படுத்த வேண்டாம்: சிகிச்சை பலனளிக்க முதல் அறிகுறிகள் தோன்றிய சில நாட்களுக்குள் சிகிச்சை தொடங்கப்பட வேண்டும்.

இலவச டெலிஹெல்த் ஆதார வளங்களை அணுக உங்களுக்கு விருப்பம் இருந்தால், COVID-19 சிகிச்சைக்கான இலவச டெலிஹெல்த்தை (ஸ்பானிஷ் மொழியில் உள்ளன) பார்வையிடவும் மற்றும் முன்பதிவு சந்திப்பை ஏற்பாடு செய்ய அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். நீங்களும், உங்கள் மருத்துவ சேவை வழங்குநரும் குறிப்பிட்ட COVID-19 சிகிச்சை முறைகள் பற்றிய கூடுதல் தகவல்களை தெரிந்துகொள்ள, DOH இணையப்பக்கத்தைப் (மேலும் சில மொழிகளில் உள்ளன) பார்வையிடவும்.

விலகியிருத்தலின் போது, உணவு, தனிப்பட்ட பராமரிப்பு கருவிகள் அல்லது பிற தேவைகள் போன்ற உதவிகள் உங்களுக்கு தேவைப்பட்டால், WA DOH ஹாட்லைனை 1-800-525-0127 என்ற எண்ணில் அழைத்து உங்கள் பாசிட்டிவ் பரிசோதனை முடிவைத் தெரிவித்து, Care Connect உடன் பேசச் சொல்லலாம் அல்லது உங்கள் Care Connect (மேலும் சில மொழிகளில் உள்ளன) மையத்தை அணுகவும். விலகியிருத்தலின் போது உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உதவியை அணுகுவதில் தாமதத்தைத் தடுக்க ஹாட்லைன் மூலம் உங்கள் பரிசோதனை முடிவைத் தெரிவிக்கவும்.

உங்கள்நெருக்கமான தொடர்புகளுக்குஅவர்கள் COVID-19 தொற்றுக்கு வெளிப்பட்டிருக்கலாம் என்று நினைத்தால் COVID-19 உள்ள ஒருவரிடம் நீங்கள் சாத்தியமான முறையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் என்ன செய்வது (மேலும் சில மொழிகளில் உள்ளன) என்ற இணைப்பை அவர்களுக்கு அனுப்பவும். தொற்றாளருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததாகப் பொதுவாகக் கருதப்படுவது என்பது COVID-19 தொற்றுக்குள்ளான ஒருவருடன் 6 அடிக்கு (2 மீட்டர்) குறைந்த தூரத்தில் ஒட்டுமொத்தமாக 15 நிமிடங்கள் அல்லது 24 மணி நேரத்திற்கும் அதிகமான

நேரம் தொடர்பில் இருந்திருப்பதாகும். இருப்பினும், நெருக்கமான இடங்கள், மோசமான காற்றோட்டம் அல்லது கூச்சலிடுவது அல்லது பாடுவது போன்ற செயல்களில் ஈடுபடுவது போன்ற சாத்தியமான வெளிப்பாட்டின் ஆபத்தை அதிகரிக்கும் சூழ்நிலைகளில் நீங்கள் இருந்திருந்தால், உங்களிடமிருந்து மற்றவர்கள் 6 அடிக்கு (2 மீட்டர்) மேல் இருந்திருந்தாலும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. உங்களுக்கு அறிகுறிகள் தோன்றுவதற்கு 48 மணிநேரம் (அல்லது 2 நாட்கள்) முதல் மற்றும் அறிகுறிகள் தோன்றிய பிறகு குறைந்தது 10 நாட்களுக்குள் நீங்கள் COVID-19 தொற்றை மற்றவர்களுக்குப் பரப்பலாம். உங்களுக்கு அறிகுறிகள் தோன்றாமல், ஆனால் COVID-19 பரிசோதனை பாசிட்டிவாக வந்தால், உங்களுக்கு பாசிட்டிவ் பரிசோதனை வந்த 48 மணிநேரம் (அல்லது 2 நாட்கள்) முதல் மற்றும் உங்கள் பாசிட்டிவ் பரிசோதனைக்குப் பிறகு குறைந்தது 10 நாட்களுக்கு உங்களால் COVID-19 தொற்றை பரப்பியிருக்க முடியும். ஒரு நபரின் விலகியிருத்தல் காலம் 10 நாட்களுக்கு மேல் இருந்தால் (உங்களுக்கு அறிகுறிகள் தொடர்ந்து இருந்தால் அல்லது கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தால்), அவர்கள் விலகியிருத்தல் காலத்தின் முடிவில் தொற்றுநோயைப் பரப்பக்கூடியவர்களாக இருப்பார்கள். உங்கள் நெருங்கிய தொடர்புகளுக்கு அவர்கள் COVID-19 தொற்றுக்கு ஆளாகியிருக்கலாம் என்பதைத் தெரியப்படுத்துவதன் மூலம், நீங்கள் அனைவரையும் பாதுகாக்க உதவுகிறீர்கள்.

நீங்கள் [WA Notify (WA அறிவிப்புகள்)](#) (மேலும் சில மொழிகளில் உள்ளன) செயலியைப் பயன்படுத்தினால் மற்றும் சுய பரிசோதனையின் மூலம் COVID-19 பரிசோதனை பாசிட்டிவாக வந்தால், சரிபார்ப்புக் குறியீட்டைக் கோரி, செயலியில் உங்கள் முடிவை உறுதிசெய்வதன் மூலம் WA Notify ஐப் பயன்படுத்தி நீங்கள் பிற பயனர்கள் தொற்றுக்கு வெளிப்பட்டுள்ளதை அநாமதேயமாக எச்சரிக்கை செய்யலாம். இது செயலியைப் பயன்படுத்தும் தொற்று வெளிப்படும் சாத்தியம் உள்ளவர்களுக்கு தெரிவிக்கும், அதனால் அவர்கள் தங்களையும் தங்களைச் சுற்றியுள்ளவர்களையும் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம். நீங்கள் WA Notifyஐப் பயன்படுத்தும் போது தனிப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய தகவல்கள் எதுவும் சேகரிக்கப்படாது அல்லது பகிரப்படாது. ஒரு உறுதிபடுத்தல் குறியீட்டைக் கோருவதற்கு:

1. உங்கள் மொபைல் சாதனத்தைப் பயன்படுத்துதல் (Android அல்லது iPhone), QR கோடை ஸ்கேன் செய்யவும் அல்லது [ஒரு உறுதிபடுத்தல் குறியீட்டைக் கோரவும்](#) (ஆங்கிலத்தில் மட்டும்):

2. WA Notify ஐப் பயன்படுத்தும் உங்கள் சாதனத்தின் தொலைபேசி எண்ணையும், COVID-19 பரிசோதனையின் முடிவு பாசிட்டிவ் என்று வந்த தேதியையும் உள்ளிடுக.
3. “Continue (தொடர்க)” என்பதைத் தேர்வுசெய்யவும்.

உங்களால் WA Notify இன் மூலம் உறுதிபடுத்தல் குறியீடு ஒன்றினைக் கோர முடியாத பட்சத்தில், 1-800-525-0127 எனும் மாநில COVID-19 அவசர எண்ணை அழைத்து # குறியீட்டினை அழுத்தி நீங்கள் ஒரு WA Notify பயனர் என்பதனை ஹாட்லைன் ஊழியரிடம் தெரியப்படுத்துங்கள். ஹாட்லைன் ஊழியர்கள் உங்களுக்கு ஒரு உறுதிபடுத்தல் இணைப்பை வழங்குவார்கள், அதன் மூலம் வெளிப்பட்ட மற்ற WA Notify பயனர்களை நீங்கள் எச்சரிக்கலாம்.

[WANotify.org](WANotify.org)(மேலும் சில மொழிகளில் உள்ளன) இணையதளத்தில் உள்ள"[சுய-பரிசோதனையில் உங்களுக்கு COVID-19 பரிசோதனை பாசிட்டிவாக வந்திருந்தால், மற்றவர்களுக்கு எவ்வாறு அறிவிப்பது]()"(மேலும் சில மொழிகளில் உள்ளன) என்ற பிரிவைப்பார்வையிடவும். WA Notify குறித்தும் உங்கள் தொலைபேசியில் அதை எவ்வாறு சேர்ப்பது என்பது உள்ளிட்ட தகவல்களைப் பற்றி மேலும் அறிய விரும்பினால், [WANotify.org](WANotify.org) (மேலும் சில மொழிகளில் உள்ளன) என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

## உங்கள் பரிசோதனை நெகட்டிவாக இருந்தால்,

நெகட்டிவ் பரிசோதனை முடிவு என்றால், COVID-19 தொற்றுக்கு காரணமான SARS-CoV-2 வைரஸ், அந்த நேரத்தில் பரிசோதனையின் மூலம் கண்டறியப்படவில்லை என்பதாகும்.

தொடர் பரிசோதனை என்பது ஒரு நபர் ஒவ்வொரு சில நாட்களுக்கும் பலமுறை பரிசோதனை செய்வதாகும். அடிக்கடி பரிசோதனை செய்வதன் மூலம், நீங்கள் COVID-19 தொற்றை விரைவாகக் கண்டறிந்து, தொற்று பரவுவதைக் குறைக்கலாம். சுய சேகரிப்பு பரிசோதனைக் கருவிகள் பெரும்பாலும் இரண்டாவது பரிசோதனையுடன் வருகின்றன, மேலும் அவை ஒரு தொடரில் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. உங்கள் முதல் சுய பரிசோதனையின் முடிவு நெகட்டிவாக இருந்தால், தொடர் பரிசோதனைக்கான உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். இந்தப் பரிசோதனைகள் மூன்று நாட்களுக்கு இரண்டு முறை செய்யப்பட வேண்டும், பரிசோதனைகளுக்கு இடையில் குறைந்தது 24 மணிநேரம் இருக்க வேண்டும் மற்றும் 48 மணிநேரத்திற்கு மேல் இருக்கக்கூடாது. உங்கள் பரிசோதனை முடிவுகள் அல்லது தொடர் சோதனை குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், மருத்துவ சேவை வழங்குநரைத் தொடர்புகொள்ளவும்.

வீட்டிலேயே செய்யும் COVID-19 ஆன்டிஜென் பரிசோதனையின் முடிவு நெகட்டிவாக இருப்பது,சில நேரங்களில் "தவறான நெகட்டிவ்" முடிவாக இருக்கலாம். அதாவது, உங்கள் நாசி ஸ்வாப் மாதிரியில் இருந்த SARS-CoV-2 வைரஸ் பரிசோதனையின் மூலம் கண்டறியப்படவில்லை. உங்களுக்கு COVID-19 அறிகுறிகள் இருந்தாலோ அல்லது COVID-19 தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தாலோ (COVID-19 [சமூக நிலை]() (ஸ்பானிஷ் மொழியில் கிடைக்கிறது) அதிகமாக இருந்தால் அல்லது நீங்கள் COVID-19 நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் வெளிப்பட்டிருந்தால்):

- உங்களுக்கு முதல் பரிசோதனை நெகட்டிவாக இருந்து, COVID-19 அறிகுறிகள் இருந்தால், அறிகுறிகள் தொடங்கி குறைந்தது ஐந்து நாட்களுக்கு ஒவ்வொரு 24-48 மணி நேரத்திற்கும் மறுபரிசோதனை செய்யுங்கள்.
- உங்களுக்கு COVID-19 அறிகுறிகள் இல்லாமல், COVID-19 தொற்றுக்கு வெளிப்பட்டிருக்கலாம் எனும் பட்சத்தில், முதல் நெகட்டிவ் பரிசோதனைக்குப் பிறகு 24-48 மணிநேரத்திற்குள் ஆன்டிஜென் பரிசோதனையை மீண்டும் செய்யவும். இரண்டாவது பரிசோதனையின் முடிவு நெகட்டிவாக இருந்து, COVID-19 தொடர்பான பிரச்சனைகள் இருந்தால், இரண்டாவது நெகட்டிவ் பரிசோதனை செய்த 24-48 மணிநேரங்களுக்குப் பிறகு, குறைந்தது 3 பரிசோதனைகளை நீங்கள் மீண்டும் செய்யலாம். ஆன்டிஜென் பரிசோதனை மூலம் 3 முறை பரிசோதனை செய்ய போதுமான ஆதாரவளங்கள் உங்களிடம் இல்லை என்றால், உங்கள் ஆதாரவளங்கள் மற்றும் உங்களுக்கும் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஏற்படும் ஆபத்து நிலைக்கு ஏற்ப குறைவாக பரிசோதிப்பது ஏற்கத்தக்கது ஆகும்.

- நீங்கள் மீண்டும் மீண்டும் செய்த பரிசோதனையின் முடிவுகள் நெகட்டிவாக இருந்தாலும், உங்களுக்கு COVID-19 இருக்கலாம் என்று நீங்கள் கவலைப்பட்டால், ஆன்டிஜென் பரிசோதனையைப் பயன்படுத்தி மீண்டும் பரிசோதிக்கலாம், ஆய்வக மூலக்கூறு அடிப்படையிலான பரிசோதனையைப் பெறலாம் அல்லது உங்கள் சுகாதார சேவை வழங்குநரை அழைக்கலாம்.

மேலும் தகவல்களுக்கு DOH இன் சுகாதாரச் சேவை வழங்காத பராமரிப்பு அமைப்புகளுக்கான அறிகுறி முடிவுகாண் மரத்தை(மேலும் சில மொழிகள் உள்ளன) காணவும்.

நீங்கள் COVID-19 தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் வெளிப்பட்டு, உங்களுக்கு தொடர்ச்சியாக பரிசோதனையின் முடிவு நெகட்டிவாக வந்திருந்தால், COVID-19 உள்ள ஒருவரிடம் நீங்கள் வெளிப்பட்டால் என்ன செய்ய வேண்டும் (மேலும் சில மொழிகளில் உள்ளன) என்பதில் உள்ள வழிகாட்டுதலைத் தொடர்ந்து பின்பற்றவும்.

## உங்கள் பரிசோதனையின் முடிவு தவறாகவோ அல்லது பிழையாகவோ இருந்தால்

சில நேரங்களில் முடிவுகள் தெளிவாக இல்லாமல் அல்லது முடிவுகள் எடுக்க முடியாத நிலையில் இருக்கும், மேலும் உங்கள் முடிவுகள் பாசிட்டிவாக உள்ளதா அல்லது நெகட்டிவாக உள்ளதா என்பதை பரிசோதனையால் சொல்ல முடியாது. உங்கள் மாதிரி சரியாக சேகரிக்கப்படாமல் இருக்கலாம் அல்லது சுய சேகரிப்பு பரிசோதனைக் கருவி செயலிழப்பு போன்ற பல காரணங்களால் தவறான முடிவுகள் ஏற்படலாம். தவறான பரிசோதனை முடிவுகள் அரிதானவை ஆனால் ஏற்படலாம்.

சுய-பரிசோதனைக் கருவியின் டிஸ்பிளே தவறான முடிவு அல்லது பரிசோதனைப் பிழையைக் காட்டினால், பரிசோதனைக் கருவி சரியாக வேலை செய்யவில்லை. இவ்வாறு நடக்கும் பட்சத்தில், மற்றொரு புதிய பரிசோதனைக் கருவி கிடைத்தால், மீண்டும் ஒரு முறை பரிசோதனையை செய்யவும். இரண்டாவது பரிசோதனை முடிவும் தவறானதாக இருந்தால், அறிவுறுத்தல்களைப் பார்க்கவும் மற்றும் உதவிக்கு உற்பத்தியாளரைத் தொடர்பு கொள்ளவும். நீங்கள் ஒரு மருத்துவ சேவை வழங்குநரிடமிருந்து அல்லது ஒரு பொது சுகாதார பரிசோதனை தளத்திலிருந்து (மேலும் சில மொழிகள் உள்ளன) பரிசோதனைக் கருவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## COVID-19 பற்றிய கூடுதல் தகவல்கள் மற்றும் ஆதாரவளங்கள்

வாஷிங்டனில் COVID-19 இன் தற்போதைய நிலை, (ஆங்கிலத்தில் மட்டும்), ஆளுனர் Inslee-இன் பிரகடனங்கள் (சீனம் (எளிமைப்படுத்தப்பட்டது), கொரியன், ரஷ்யன், ஸ்பானிஷ் மற்றும் வியட்நாமிய மொழிகளில் உள்ளன - இணையதளத்தின் மேலே உள்ள பட்டியலில் இருந்து தேர்வு செய்யவும்), அறிகுறிகள் சீனம் (எளிமைப்படுத்தப்பட்டது), கொரியன், ஸ்பானிஷ் மற்றும் வியட்நாமிஸ்), அது எவ்வாறு பரவுகின்றது சீனம் (எளிமைப்படுத்தப்பட்டது), கொரியன், ஸ்பானிஷ் மற்றும் வியட்நாமிஸ்), எவ்வாறு மற்றும் எப்போது மக்கள் பரிசோதிக்கப்பட வேண்டும் (மேலும் சில மொழிகளில் உள்ளன) , மற்றும் தடுப்பூசிகளை எங்கே பெறுவது (மேலும் சில மொழிகளில் உள்ளன)ஆகியவற்றை உடனுக்குடன் அறிந்துகொள்ளுங்கள். மேலதிக தகவல்களுக்கு, எங்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் (ஆங்கிலத்தில் மட்டும்) பார்வையிடுங்கள்.

ஒரு நபரின் வர்க்கம்/இனம் அல்லது தேசியம், தானே சுயமாக, அவர்களை COVID-19 க்கான அதிக ஆபத்தை ஏற்படுத்தாது. இருப்பினும், COVID-19 ஆல் நிறமுள்ள சமூகங்கள் அளவுக்கு அதிகமாக பாதிக்கப்படுகின்றன என்பதை தரவுகள் வெளிப்படுத்துகின்றன. இனவெறியின் விளைவுகளாலும்,

குறிப்பாக கட்டமைப்பு இனவெறியினால், சில குழுக்கள் தங்களையும், தங்கள் சமூகங்களையும் பாதுகாக்க குறைந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளமை இதற்கு காரணமாகும். [களங்கம் விளைவித்தல் இந்நோய் நிலைமையைத் தடுப்பதில் உதவாது](#) (ஆங்கிலத்தில் மட்டும்). வதந்திகள் மற்றும் தவறான தகவல்களைப் பரப்புவதைத் தடுக்க மிகச் சரியான தகவல்களை மட்டுமே பகிரவும்.

- WA State Department of Health கொரோனா வைரசுக்கான செயல்பாடுகள் (COVID-19) (மேலும் சில மொழிகளில் உள்ளன)
- உங்களது உள்ளூர் அல்லது மாவட்ட சுகாதாரத் துறையைக் கண்டறியுங்கள் (ஆங்கிலத்தில் மட்டும்)
- Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்)கொரோனா வைரஸ் (COVID-19) (மேலும் சில மொழிகளில் உள்ளன- சீனம் (எளிமைப்படுத்தப்பட்டது), கொரியன், ஸ்பானிஷ், வியட்நாமிஸ்)

மேலும் கேள்விகள் உள்ளதா? எங்கள் COVID-19 தகவல் ஹாட்லைனை 1-800-525-0127 என்ற எண்ணில் அழைக்கவும். ஹாட்லைன் நேரம்:

- திங்கட்கிழமை, காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
- செவ்வாய் முதல் ஞாயிறு வரை, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
- கடைபிடிக்கப்படும் மாநில விடுமுறை நாட்களில் (ஆங்கிலத்தில் மட்டும்) காலை 6 மணி முதல் இரவு 6 மணி வரை

மொழிபெயர்த்துரைப்பாளர் சேவைகளுக்கு, அவர்கள் பதிலளிக்கும் போது # ஐ அழுத்தி உங்கள் மொழியைச் சொல்லுங்கள். உங்கள் உடல்நலம் அல்லது பரிசோதனை முடிவுகள் குறித்த கேள்விகளுக்கு, தயவுசெய்து ஒரு சுகாதார வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும்.

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள்திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) (ஆங்கிலத்தில் மட்டும்) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.